கோசலா மெடல் பவுடர் கம்பெனி, நாக்பூர்—இவர்கள் இதை உற்பத்தி செய்கிறார்கள். எந்தெந்த கம்பெனிகள் என்னென்ன தேவைகளுக்காக வாங்குகிறார்கள் என்பது பற்றிய விவரமில்லை.

Training Centre for the Manufacture of Temple Cars (Rathas).

* 144 Q.—THIRU K. RAJARAM (on behalf of Thiru V. ISVARMURTI): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any training centre for the manufacture of temple cars (rathas) is run by the Government; and

(b) if so, the details thereof?

கோவில் தேர்கள் தயாரிப்பதற்கான பயிற்சி நிலையம்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவில் தேர்கள் தயாரிப்பதற்கான பயிற்சி நிலையம் ஏதேனும் அரசால் நடத்தப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) அண்டு (இ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் கோயில் தேர்கள் (ரதங்கள்) செய்வதற்கான பயிற்சி நிலையம் ஒன்றைத் தமிழக அரசு நடத்தி வருகிறது. இந்நிலையத்தில் 10 பேர்களுக்கு மூன்று ஆண்டுக்காலம் பயிற்சி கொடுக்கப்படுகிறது. பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 60 பயிற்சி உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது.

திரு. சா. கணேசன்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல தேர்த் தொழிற்சாலை நிபுணர்கள் இருக்கின்ற நிலைமையிலே, தென் பகுதியில் இருப்பதோடுமட்டும் அல்லாமல், நடுப்பகுதியிலும் இது மாதிரி ஒரு தயாரிப்புத் தொழிற்சாலை ஏற்பாடு செய்யவோ அல்லது திறமைசாலிகளுக்கு ஊக்க ஊதியம் கொடுக்கவோ அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா, இல்லாவிட்டால் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இது போன்ற தொழிற்சாலை ஒன்றும் தொடங்குவதாக இல்லை. ஆனால் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற எல்லோருக்கும் பின்னால் வேலை

1972 ஆகஸ்ட் 21]

கிடைக்குமா என்ற சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிருர்கள். இருந்தாலும் மேலும் பயிற்சி தொடங்குவதாக இல்லே.

திரு. எல். பலராமன் : தலேவர் அவர்களே, இங்கே பயிற்சியாளர்கள் செய்த தேர்கள் எங்கெல்லாம் வெள்ளோட்டம் விடப்பட்டது, நல்லமுறையில் ஓடுகிறதா என்று அரசாங்கத்துக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலேவர் அவர்களே, எந்தெந்த ஊர்களில் தேர்கள் ஓடுகின்றன என்ற விவரமில்லே. ஆனல் பயிற்சி பெற்றவர்கள் பல கோவில்களில் தேர்கள் செய்யக்கூடிய வேலே பார்த்து வருகிருர்கள். உதாரணமாக மதுராந்தகத்தில் தேர் வேலே பார்த்து வருகிருர்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளே : பள்ளியில் பயிற்றுவிக்கப்படுவது பழைய காலத்து முறையிலே பயிற்றுவிக்கப்படுமா அல்லது புதிய முறையில், தானே இயங்குகிற முறையிலே பயிற்றுவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலேவர் அவர்களே, பழைய பண்பாடுகள் குன்றுமல் தேர்கள் செய்யும் முறை பின்பற்றப்படுகிறது.

Industrial Estates.

*145 Q.—THIRU K. RAJARAM (on behalf of Thiru V. ISVARMURTI): Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the expansion carried out during 1971–72 at the Industrial Estates in the State, district-wise?

தொழிற்பேட்டைகள்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1971–72-ல் மாவட்ட வாரியாக இம்மாநிலத்தில் உள்ள தொழிற்பேட்டைகளில் மேற்கொள்ளப்பட்ட தொழில் வளர்ச்சிப் பணிகளின் விவரங்கள் யாவை ?